முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்

OS.No.1336/2024

Witness-DW2

பெயர்.. தங்கராஜ்

த/பெ –மாயவன்

இன்று (06.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி வீரப்ப கவுண்டர் எந்த தெருவில் வசித்து வந்தார் என்றால் பட்டித் தெருவில் வசித்துவந்தார். வீரப்பன் மொத்தமாக எவ்வளவு சொத்து அனுபவித்து வந்தார் என்ற எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி விஜயலட்சுமி தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்ட சொத்தின் சர்வே நம்பர் விஸ்தீரணம் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா அட்டவைணைச் சொத்தில் உள்ள சொத்துக்கள் யார் பெயரில் ஆவணங்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் வீரப்பன் அவரது அப்பா பெயரில் உள்ளதாகத்தான் தெரியும். வாதி திருமணம் ஆகி செல்லும் வரை வீரப்பன் வாதி மற்றும் வீரப்பனின் மற்ற குழந்தைகள் அனைவரும் ஒன்றாகத்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான் . வாதி விஜயலட்சுமி பெயரில் உள்ள சொத்தை அவரது திருமணத்திற்கு பிறகும் வீரப்பன் தான் அனுபவித்து வந்தார் என்றால் விஜயலட்சுமி பெயரில் பத்திரம் இல்லை வீரப்ன் தான் அனுபவித்து வந்தார். இந்த வழக்கில கண்ட சொத்துக்களுக்கான பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களுக்கு அருகில் எனக்கு சொத்துக்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை எனது வீட்டிற்கு போகும வழிதான். நான் இதற்கு முன்பாக நீதிமனறத்தில் சாட்சி சொன்னேனா என்றால் இல் லை. வழக்கு சொ்த்துக்ள் மற்றம் வழக்கில் விவரங்கள்எதுவும தெரியாமல் 4ம் பிரதிவாதி ராஜேஸ்வரிக்கு ஆதரவாக பிரமாண பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-.A. Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram